கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு  **4/2023**

வாதி தரப்பு சாட்சி –1 சிவக்குமார் என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**2 முதல் 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. அரசு அதிகாரிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பெயரில் உள்ள பட்டாவை இரத்து செய்ய மிரட்டியதால் அவர்களுக்கு எதிராக பரிகாரம் கேட்டுள்ளேன். எனது வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் மேற்படி விவரவங்களை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சர்வே எண்.50/1 என்பது பழைய சர்வே எண் என்றால் சரிதான். மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 5 சென்ட் ஆகும். மேற்படி சொத்தானது நகராட்சி டவுன் சர்வே எண்ணாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் நகராட்சி அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன்.

2. எனது வழக்குரையில் தாவா சொத்திற்கான டவுன் சர்வே எண் பற்றிய விவரங்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு டவுன் சர்வே எண் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகள் எனக்கு எந்தவித இடைஞ்சலும் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா சம்மந்தமாக விசாரணைக்கு வருவாய் கோட்டாட்சியருக்கு அனைத்து அதிகாரமும் உள்ளது என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகளை பொறுத்து நான் எவ்வித பரிகாரமும் கோரராத நிலையில் அரசு அதிகாரிகளுக்கு எதிரான இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**